# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## நான்காம் வருட முதலாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு 2011/2012 (பெப்ரவரி/மார்ச் 2014)

## TLS 4104 தமிழாராய்ச்சியின் வளர்ச்சி

நேரம்: 3 மணித்தியாலங்கள்

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடை தருக

---

1. அ. நவீன தமிழாய்வு என்பதனால் நீர் விளங்கிக்கொள்வது யாது? சுருக்கமாகக் குறிப்பிடுக.

   ஆ. பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் மேற்கொள்ளப்பட்ட பதிப்புப் பணிகள் தமிழாய்வை விரிவாக்க உதவின என்று கூறலாமா? ஆராய்க.

2. தமிழாய்வு நெறியில் நூற்றொகுப்பு முயற்சிகள் முக்கிய இடத்தை வகிக்கின்றன என்று கூறலாமா? ஆராய்க.

3. அண்மைக்காலத் தமிழாய்வுகளுள் பின்வருவனவற்றில் யாதேனும் ஒன்று பெற்றுள்ள வளர்ச்சி பற்றி மதிப்பிடுக.

   அ. சிறுகதை பற்றிய ஆய்வுகள்
   ஆ. பண்டைய தமிழ் இலக்கியங்களின் காலம் பற்றிய ஆய்வுகள்
   இ. மார்க்சிய அணுகுமுறை
   ஈ. பெண்ணிய நோக்கிலான தமிழ் இலக்கிய ஆய்வுகள்
   உ. தமிழில் ஒப்பியலாய்வின் தோற்றமும் வளர்ச்சியும்

4. அ. பத்தொன்பதாம் நூற்றாண்டு ஆய்வு வளர்ச்சியில் ஈழத்துத் தமிழ் அறிஞர்கள் சிறப்பிடம் பெற்றமைக்கான காரணங்கள் யாவை? சுருக்கமாகத் தெளிவுபடுத்துக.

   ஆ. அக்காலகட்டத்தில் இடம்பெற்ற முக்கியமான ஆய்வுகள் குறித்து ஆராய்க.

5. 'தமிழில் விஞ்ஞானபூர்வமான ஆராய்ச்சிக்கு வித்திட்டவர் எஸ். வையாபுரிப்பிள்ளை ஆவார்' இக்கூற்றை அடிப்படையாகக் கொண்டு தமிழாய்வு வளர்ச்சியில் வையாபுரிப்பிள்ளை பெறும் இடத்தை மதிப்பிடுக.

6. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு விளக்கக் குறிப்பு எழுதுக.

   அ. தொல்காப்பியச் சிறப்புப் பாயிரம்
   ஆ. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்
   இ. உ.வே.சாமிநாதையர்
   ஈ. நா.வானமாமலை
   உ. நிகண்டுகள்